[20th July 1964

எந்த சபையாவது அப்படிக் கொடுக்க முன்வந்தால், அதற்கான முயற்சிகள் செய்யப்படுகின்றன. பெரிய நகரங்களில் அரிஜனங்களுக்குக் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக மனைக்கட்டுக்கள் வாங்கிக் கொடுக்க தக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. சென்னை நகரத்திலே கூட அந்த முறையில்தான் ஏற்பாடு செய்கிறோம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : இதற்கு முன்பு மனைக்கட்டு வாங்கிக் கொடுக்கும்போது, புஞ்சையாக இருந்தால் ஐந்து சென்டும் நஞ்சையாக இருந்தால் மூன்று சென்டும் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது நஞ்சையாக இருந்தாலும் புஞ்சையாக இருந்தாலும் மூன்று சென்டுக்கு மேல் கொடுக்கக் கூடாது என்று சர்க்கார் அதிகாரிகள் சொல்கிறார்களே, அதன் அடிப்படைக் கருத்து என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : நஞ்சையாக இருந்தால் மூன்று சென்ட், புஞ்சையாக இருந்தால் ஐந்து சென்ட் என்கிற விதிமுறைகள் இன்னும் மாறவில்லை. இருந்தாலும், சில இடங்களில் இடம் வேண்டுமென்று கோருகிறவர்கள் அதிகமாக இருப்பார்கள். தங்களுக்கு மூன்று சென்ட் மனை கொடுத்தால் போதும் என்று அவர்களே ஒத்துக்கொள்ளும்போது, மூன்று சென்ட் கொடுத்தாலும் பரவாயில்லை என்ற கருத்தில், அப்பேர்ப்பட்ட இடங்களில் மூன்று சென்ட் கொடுக்க முன்வருவார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : நகரசபைப் பகுதிகளில் இருக்கும் அரிசன மக்களுக்குத் தனியாருடைய பூமியை ஆர்ஜிதம் செய்து கொடுக்கும் போது, செலவில் பத்து சதவிகிதத்தை நகரசபை கொடுத்தால் அதை ஏற்றுக்கொள்வதாகச் சொல்கிறார்கள். சர்க்காருடைய பூமி நகரசபை எல்லைக்குள்ளே இருந்தால் அந்தப் பூமியை அரிசன மக்களுக்கு வழங்குவதில் ஏன் தாமதம் இருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : சர்க்கார் பூமி வெறுமனே கிடக்கும் போது, அரசாங்கத்திற்குத் தேவை இல்லாதபோது, அவற்றை ஏழை அரிசன மக்களுக்குக் கொடுக்கலாம் என்று அரசாங்கம் கருதும் நேரத்தில் அரசாங்கம் நிச்சயமாக அவர்களுக்குக் கொடுக்கும்.

*** 552 கேள்வி—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய் து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

கூட்டுறவு முறையில் கிராமங்களிலும் நகரங்களிலும் வீடு கட்டும் அரிசனங்களுக்கு அரிசன இலாகாவிலிருந்து 1/5 பாகம் பங்குத்தொகை முழுவதையும் கட்ட அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதுபற்றி 1959-ம் ஆண்டிலேயே பரிசீலனை செய்யப்பட்டது. கிராம வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரிசன உறுப்பினர்கள் பங்கு மூலதனம் செலுத்துவதை

20th July 1964]

எளிதாக்குவதற்காக அவர்களுக்கு அரசாங்க நிதிகளிலிருந்து கடன் வழங்கலாமென அரசாங்கம் முடிவு செய்தது. பங்கு மூல தனத் தொகையில் பாதி கடனாகக் கொடுக்கப்படும். மற்ற பாதியை உறுப்பினர்களே செலுத்த வேண்டும். ஆரம்பப் பங்கு மூலதனம் முழுவதையும் அரசாங்க நிதிகளிலிருந்தே கொடுப்பதற்குப் போதிய காரணமில்லையென்று அரசாங்கத்தார் கருதுகிறார்கள்.

இச்சலுகைகளை நகரக் கூட்டுறவுச் சங்கங்களில் அரிசன உறுப்பினர்களுக்கும் ஏன் விஸ்தரிக்கக்கூடாது என்பதை அரசாங்கம் யோசித்து வருகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலில், பங்குத் தொகையில் பாதிப் பணத்தை அரசாங்கம் கடனாகக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அது நடைமுறையில் இருந்தாலுங்கூட, பாக்கிப் பாதிப் பணத்தையும் உடனடியாக அரிசன மக்கள் கட்ட முடியாத காரணத்தினாலேதான், கிராம வீடு கட்டும் திட்டம் அரிசன மக்களுக்கு முழுப்பலனை அளிக்க முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால், இதை மறு பரிசீலனை செய்து, ஐந்திலொரு பங்குத் தொகை முழுவதையும் அரசாங்கமே அரிசன மக்களுக்குக் கொடுக்க அமைச்சர் அவர்கள் மீண்டும் ஏதாவது வழி வகை செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : இது பற்றி அரசாங்கம் ஏற்கனவே பரிசீலனை செய்திருக்கிறது. பாதிப் பணத்தைக் கடனாகக் கொடுத்தால் அதிகமான பேர்களுக்குக் கொடுக்க முடியும் என்ற காரணத்தால், சில பேர்களுக்குக் கொடுத்ததைப் பல பேர்களுக்குக் கொடுக்கலாம் என்ற நோக்கத்தினால்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. மாதா கவுடர் : கூட்டுறவுத் திட்டத்தின்படி ஐந்திலொரு பங்குத் தொகையைக் கொடுக்கவேண்டுமென்ற தேவை இருப்பதால், அரிசன மக்களுக்கு இந்த வீடு கட்டும் திட்டம் வெகுவாகப் பரவவில்லை. ஆகவே, அரிசனங்கள் பத்திலொரு பங்குத் தொகை கொடுத்தால் போதும் என்ற முறையில் இத்திட்டத்தை மாற்றி அமைத்தால், சாக்கார் பாதித் தொகை கொடுப்பதுபோக பாக்கித் தொகையை அரிசன மக்களே கட்டிவிட முடியும். இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : மதிப்புக்குரிய கூட்டுறவு இலாகா அமைச்சர் அவர்களுக்கு இக்கேள்வியைப் போடலாம்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கூட்டுறவுக் கடன்கள் நிலம் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுகிறதே தவிர, நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்கப்படுவதே இல்லை. அப்பொழுது வீடு கட்டிக் கொள்ள ஆசைப்படுகிற ஏழை அரிசன மக்கள் பாதிக்கப் படுகிறார்கள்.

கனம் சபாநாயகர் : இது கூட்டுறவு அமைச்சர் அவர்களுக்குப் போட வேண்டிய கேள்வி. தனியாகக் கேள்வி போடலாம்.